**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.139 /2017**

**Prosecution Witnesses : 6**

| | | | |
|---|---|---|---|
| Name | : சரவணன் | Caste | : |
| Father 's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused absent.PFA)
**07.06.2024**
**முதல் விசாரணை**

நான் தற்போது ராணிபேட்டை மாவட்டம் கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகின்றேன். நான் இதற்கு முன்பு ஆஸ்டின்பட்டி காவல் நிலையத்தில் பொறுப்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது அதே காவல் நிலையத்தில் பணிபுரிந்த உதவி ஆய்வாளர் திரு. ராஜ்குமார் பதிவு செய்து என் பார்வைக்கு வைத்த நிலைய குற்ற எண். 445/2015 பிரிவுகள் 420,428,471, 120(பி) இதச வின் படியான வழக்கை 17.11.2015 அன்று மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகள் கச்சம்மாள் மற்றும் முப்புரம் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்து மறுநாள் மறுவாக்குமூலமும் பதிவு செய்து வைத்திருந்த நிலையில் எனக்கு பணி மாறுதல் வரவே வழக்கு கோப்புகளை அதன் பின் வந்த ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன்.

**எதிரி தரப்பில் கு.வி.**

குற்றச்சம்பவம் நடந்தது 1983 என்றால் சரிதான். 32 வருடங்கள் கழித்து தான் காவல் நிலையத்தில் புகார் வரப்பெற்றது என்றால் சரிதான். கச்சம்மாளின் தந்தை கச்சம்மாளின் தாயாருக்கு தாவா சொத்தை எழுதி வைத்ததாக நான் பெற்ற 161(3) குவிமுச வாக்குமூலத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் மறுவாக்குமூலம் மற்றும் தான் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. முதல் வாக்குமூலமும் நான் தான் வாங்கியுள்ளேன். நான் சொல்வது போது முதல் வாக்குமூலம் எதுவும் நான் பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கின் ஆவணங்கள் எதுவும் நான் பார்வையிடவில்லை என்றால் சரிதான்.